**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அ.வ.எண். 54/2022

பெயர் – பரமசிவம்(வா.சா.1)

நாள் – 14.11.2025

**<u>2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1) நான் தாக்கல் செய்த கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் குறியீடு செய்யப்பட்ட இரண்டு ஆவணங்களின் முன் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த இரண்டு ஆவணங்கள் அரசு பொது பாதை என்றால் சரிதான். அது பொது பாதை என்பதால் எனக்கு என்று தனிப்பட்ட உரிமை கிடையாது என்றால் அனைவருக்கும் அந்த பாதை பொதுவானது ஆகும்.

2) அது பொது பாதை என்பதால் உட்பிரிவு செய்யப்பட்டு தனியாக சர்வே எண் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் பொது பாதையானது கிராமத்திற்கே பொதுவானதாக இருந்து வருகிறது என்றால் சரிதான்.

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1) நீ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்.654/47 மற்றும் 654/50 1ம் பிரதிவாதி கருப்பசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் 654/47 மட்டுமே பாத்தியப்பட்டது மற்றது குறித்து எனக்கு தெரியாது. சர்வே எண்.654/48 க்கு கிழக்கையும், மேற்கையும் 1ம் பிரதிவாதி கருப்பசாமி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1 ஆவணமானது எப்போது தயார் செய்யப்பட்டது என்று குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2) மேற்படி 1954 Settlement Land Records இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. சர்வே எண்.654/48 பொது பாதை என்று காட்டுவதற்கு இதற்கு முன்பாக இருந்த சர்வே எண்.94 என்னவாக இருந்தது என்பது குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பழைய சர்வே எண்.94 ல் பொது பாதை இருந்ததா, இல்லையா என்பது குறித்து உரிய அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் பஞ்சாயத்து அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொண்டேன். இதுகுறித்து பஞ்சாயத்து

அலுவலகத்தில் ஆவணங்களை எதுவும் கேட்டு பெற்றுக் கொண்டேனா என்றால் அவர்கள் கொடுக்கவில்லை.

3) உண்மையில் சர்வே எண்.94 ல் பொது பாதை இல்லை என்பதால் தான் அதுகுறித்து ஆவணங்கள் கேட்ட போதும் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் ஆர்.டி.ஆர்.427/2009 என்று குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து எனக்கு எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. (சாட்சி தான் 2 ம் வகுப்பு வரை படித்துள்ளதாக கூறியுள்ளார்). நீ.ம.சா.ஆ.1 ஆவணத்தை பராமரித்து வரும் சாத்தூர் வட்டாட்சியரை விசாரித்தால் தான் அந்த குறியீடு குறித்து தெரியவரும் என்றால் சரிதான். இவ்வழக்கில் சாத்தூர் வட்டாட்சியரை சாட்சியாக விசாரிக்க தயாராகயுள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

4) வா.சா.ஆ.31 ல் 1 ம் பிரதிவாதி கருப்பசாமி வீட்டிற்கு தெற்கே உள்ள கிழமேல் ரோடானது நீ.ம.சா.ஆ.2 ல் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் நீ.ம.சா.ஆ.2 ஆவணத்தின் படி சர்வே எண்.654/49 க்கு கிழக்கே ஓடை உள்ளது என்றால் சரிதான், நடைபாதை இல்லை என்றாலும் சரிதான். நீ.ம.சா.ஆ.2 ஆவணத்தின் படி சர்வே எண்.654/54 ஓடை என்றால் ஓடை இல்லை.

5) சர்வே எண்.654/54 பொது பாதை என்பதற்கு காட்டுவதற்கு அரசு ஆவணமோ, கையிருப்பு ஆவணமோ எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்கள்.654/47, 654/48, 654/50 ஆகியவை 1 ம் பிரதிவாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்.654/48 பொது பாதை என்பது தவறு என்பதை வருவாய் கோட்டாட்சியரிடம் 1 ம் பிரதிவாதி மனு செய்து அந்த விசாரணைக்கு நான் ஆஜராகினேனா என்றால் இல்லை. சர்வே எண்.654/48 பொது பாதை என்பது தவறு என்பதை வருவாய் கோட்டாட்சியரிடம் 1 ம் பிரதிவாதி மனு செய்தும் அந்த விசாரணைக்கு நான் ஆஜராகினேன் என்றும், வழக்கில் எனக்கு பாதகமாக இருப்பதால் அவ்வாறு இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) சர்வே எண்.654/48 ஒரு போதும் பொது பாதையாக நானும், எனக்கு கிரையம் கொடுத்த சுப்பம்மாளும் அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி சுப்பம்மாள், கருப்பசாமி மற்றும் எனது வீட்டின் அருகில் உள்ளவர்களை விசாரித்தால் சர்வே எண்.654/48 பொது பாதையா, இல்லையா என்பது குறித்து

தெரியவரும் என்றால் சரிதான். எனது மற்றும் 1ம் பிரதிவாதி கருப்பசாமியின் வீட்டின் அருகில் இருப்பவர்களை விசாரிக்க தயாராகயுள்ளேன் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1, 2 சர்வே எண்.654/48 பொது பாதை என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், உண்மையில் சர்வே எண்.654/48 1ம் பிரதிவாதி கருப்பசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

7) உண்மையில் 2009ம் ஆண்டில் தான் தவறுதலாக உரிய தலவிசாரணை செய்யாமல் நீ.ம.சா.ஆ.1, 2 ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது, எனவே நீ.ம.சா.ஆ.1, 2 ஏற்ககூடியதல்ல என்றால் சரியல்ல. மேற்படி தவறை சரி செய்வதற்கு 1ம் பிரதிவாதி உரிய முயற்சிகள் எடுத்து வந்த நிலையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்த காரணத்தினால் வருவாய் துறையினர் 1ம் பிரதிவாதிக்கு உரிய நிவாரணம் வழங்கவில்லை என்றால் சரியல்ல.

8) நான் கோரியுள்ள நிவாரணம் உரிமையியல் வழக்குகளின் கீழ் வரையறைக்குள் வராது என்றும் நீதி பேராணை மூலம் தான் பரிகாரம் கிடைக்க பெறும் என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.